# தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம்

## தமிழ்நாடு காவல் துறையில் உதவி ஆய்வாளர்கள் (தொழில்நுட்பம்) ஆண் / பெண் தேர்வு 2006

**I) இந்தியக் குடியுரிமையுடைய கீழ்க்கண்ட தகுதி பெற்ற ஆண் / பெண் விண்ணப்பதாரர்களிடமிருந்து உதவி ஆய்வாளர்கள் (தொழில்நுட்பம்) பதவிக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.**

**II) <u>விண்ணப்பிப்போருக்கு இருக்க வேண்டிய தகுதிகள்:</u>**

**(அ) <u>வயது</u>**

1) **01-07-2008** அன்று 20 வயது நிறைவு பெற்றவராக இருக்க வேண்டும் (30-06-1988 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ பிறந்திருக்க வேண்டும்)
2) 30 வயதிற்கு மேற்படாதவராக இருக்க வேண்டும் (01-07-1978 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ பிறந்திருக்க வேண்டும்).
3) பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்தவர்கள்:- 01-07-2008 அன்று 20 வயது நிறைவு பெற்றவராகவும் 32 வயதிற்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும் (அதாவது 01-07-1976 அன்றோ அதற்குப் பின்னரோ பிறந்திருக்க வேண்டும்)
4) **ஆதி திராவிடர் / பழங்குடியினர் வகுப்பினைச் சார்ந்தவர்கள்:-** 01-07-2008 அன்று 20 வயது நிறைவு பெற்றவராகவும்; 35 வயதிற்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும் (அதாவது 01-07-1973 அன்றோ அதற்குப் பின்னரோ பிறந்திருக்க வேண்டும்).
5) (i) **முன்னாள் இராணுவத்தினர்:-** 01-07-2008 அன்று 45 வயதிற்கு மேற்படாதவராக இருக்க வேண்டும் (அதாவது 01-07-1963 அன்றோ அதற்குப் பின்னரோ பிறந்திருக்க வேண்டும்)
   (ii) **முன்னாள் இராணுவத்தினர்:-** இராணுவப் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டு 01-07-2008 தேதியில் மூன்றாண்டு நிறைவு செய்யாதவர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.
6) **ஆதரவற்ற விதவைகள்:-** எந்த வகுப்பைச் சார்ந்தவராக இருந்தாலும் 01-07-2008 அன்று 20 வயது நிறைவு அடைந்தவராகவும். 35 வயதிற்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும் (அதாவது 01-07-1973 அன்றோ அதற்குப் பின்னரோ பிறந்திருக்க வேண்டும்)

**ஆ) <u>உடல் அளவுகள்:</u>**

**<u>ஆண்:</u> 1) உயரம்:** குறைந்த அளவு 168 சென்டி மீட்டர் இருக்க வேண்டும்

**2) மார்பளவு:-** அனைத்து வகுப்பினருக்கும் சாதாரண நிலையில் 80 சென்டி மீட்டர் இருக்க வேண்டும்.
முச்சடக்கிய மார்பு விரிவாக்கம் (Expansion) குறைந்த அளவு 5 சென்டி மீட்டர் இருக்க வேண்டும்.

**<u>பெண்:</u>**

1) **உயரம்:-** குறைந்த அளவு 155 சென்டி மீட்டர் இருக்க வேண்டும்

**இ) <u>கல்வித் தகுதி:</u>**

(1) பழைய பாடத்திட்டத்தின்படி எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி
**அல்லது**
புதிய பாடத்திட்டத்தின்படி 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்

(2) தமிழில் பேச, படிக்க மற்றும் எழுத நிறைவான அறிவு பெற்றிருக்க வேண்டும்.
**மற்றும்**

(3) தமிழ்நாடு தொழில்நுட்பக் கல்வி வாரியத்தால் வழங்கப்பட்ட மின்னணுவியல் மற்றும் தொலை தொடர்பு பொறியியல் பட்டயத்தில் குறைந்தபட்சம் இரண்டாம் வகுப்பில் தேர்வு பெற்று இருத்தல் வேண்டும். (Minimum a Second Class Diploma in Electronics and Communication Engineering Award by the State Board of Technical Education, Tamilnadu)
**அல்லது**
மின்னணுவியல் மற்றும் தொலைத் தொடர்பு பொறியியல் பட்டம் அல்லது அதற்கு இணையான கல்வித்தகுதி (A Degree in Electronics and Communication Engineering or its Equivalent)

**<u>குறிப்பு:-</u>** 1) தேர்வில் விண்ணப்பதாரர் தகுதி சமமாக இருப்பின் மின்னணுவியல் மற்றும் தொலை தொடர்பு பொறியில் துறையில் பட்டம் (A Degree in Electronics and Telecommunication) பெற்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். அந்த தகுதியும் சமமாக இருப்பின் வயதில் மூத்தவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
2) பத்தாம் வகுப்பு அல்லது அதற்கு இணையான படிப்பில் தமிழை ஒரு மொழிப் பாடமாக படித்திருக்க வேண்டும் அல்லது தமிழ் வழியாக பாடங்களை பயின்றிருந்தாலோ அல்லது தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப் பெற்ற இரண்டாம் நிலை தமிழ் தேர்வில் தேர்ச்சி பெற்றிருந்தாலோ, தமிழில் நிறைவான அறிவு பெற்றவராக கருதப்படும்.
3) மேலும், அவ்வாறு தேர்ச்சி பெறாதவர், தமிழ்நாடு அரசு தேர்வாணையத்தால் நடத்தப்படும் தமிழ் மொழித் தேர்வில், பணியில் சேர்ந்த இரண்டு வருடங்களுக்குள் தேர்ச்சி பெற வேண்டும்.

**III) <u>பதவிகளின் மொத்த எண்ணிக்கை:</u>**

மொத்த காலியிடங்கள் 209. இதில் வகுப்புவாரி விகிதாச்சார அடிப்படையில் 30% பெண்களுக்கு இட ஒதுக்கீடு அளிக்கப்படும்.

**IV) <u>ஊதிய விவரம் :</u>** ரூ. 5300-150-8300 மற்றும் இதர படிகள்.

**V) <u>வகுப்புவாரி விகிதாச்சாரம்:</u>** தற்போது நடைமுறையில் உள்ள அரசு விதிமுறைகளின்படி வகுப்புவாரி விகிதாச்சார ஒதுக்கீடு முறை கடைப்பிடிக்கப்படும்.

## <u>மாதிரி விண்ணப்பப் படிவம்</u>

**தமிழ்நாடு காவல் துறை உதவி ஆய்வாளர்கள் (தொழில்நுட்பம்) ஆண் / பெண் தேர்வு 2006-க்கான விண்ணப்பம்**

**VI) இப்பணிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர். பின் வரும் மாதிரி விண்ணப்பப் படிவத்தில் கண்டது போல் படிவம் தயாரித்து கணிப்பொறி உபயோகத்திற்காக ஆங்கிலத்தில் பூர்த்தி செய்து அனுப்பவேண்டும்:-**

| | |
|---|---|
| குறியீட்டு எண் | |
| அலுவலக உபயோகத்திற்கு மட்டும் | |

**அண்மையில் எடுக்கப்பட்ட புகைப்படம் 5 செ.மீ. x 7 செ.மீ. இங்கே ஒட்டவும்**

1. பெயர் :
   (ஆங்கிலத்தில் கொட்டை எழுத்துக்களில் பள்ளிச் சான்றிதழில் உள்ளபடி)
2. தந்தை பெயர் / கணவர் பெயர் :
3. பிறந்த தேதி :
4. பாலினம் (ஆண் / பெண்) :
5. கல்வித்தகுதி :
6. நாட்டினம் (Nationality) :
7. வகுப்பு (உரிய அடைப்பில் (✘) குறியீடு செய்ய வேண்டும்)
   (OC) ஏனையோர் ☐ ; (BC) பிற்படுத்தப்பட்ட வகுப்பு ☐ ;
   (MBC) மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு / (DNC) சீர்மரபினர் ☐ ; (SC) ஆதி திராவிடர் ☐ ; (ST) பழங்குடியினர் ☐ ;
8. மதம் (Religion) : இந்து ☐ ; இஸ்லாமியர் ☐ ; கிருஸ்தவர் ☐ ; பிற மதத்தினர் ☐
9. (அ) நீவீர் இராணுவத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவரா? : ஆம் / இல்லை
   (ஆ) ஆம் எனில் சான்று இணைக்கப்பட்டுள்ளதா? : ஆம் / இல்லை
10. (அ) நீவீர் ஆதரவற்ற விதவையா? (பெண் விண்ணப்பதாரர்கள் மட்டும்) : ஆம் / இல்லை
    (ஆ) ஆம் எனில் சான்று இணைக்கப்பட்டுள்ளதா? : ஆம் / இல்லை
11. (அ) நீவீர் ஏற்கனவே ஏதேனும் அரசுப் பணியில் உள்ளீரா? : ஆம் / இல்லை
    (ஆ) ஆம் எனில் தடையில்லாச் சான்று இணைக்கப்பட்டுள்ளதா? : ஆம் / இல்லை
12. விண்ணப்பதாரர் முகவரி
    அ) கதவு எண் : ஆ) தெருவின் பெயர் :
    இ) கிராமம் / நகரத்தின் பெயர் : ஈ) அஞ்சல் நிலையம் :
    உ) மாவட்டத்தின் பெயர் : ஊ) பின்கோடு :
    எ) முகவரிக்குட்பட்ட காவல் நிலையத்தின் பெயர் :
12. வங்கி வரைவோலை விவரம் :
    அ) வங்கியின் பெயர் : ஆ) வரைவோலை எண் :
    இ) தேதி : ஈ) தொகை :
13. உம் மீது ஏதாவது குற்ற வழக்கு இருந்ததா? அல்லது இருக்கிறதா? : ஆம் / இல்லை
    அதன் விவரம் (வழக்கு எண் __________, நாள் __________, சட்டப்பிரிவு ____________________, காவல் நிலையத்தின் பெயர் __________ மற்றும் தற்போதைய நிலை ____________________________)

### <u>உறுதிமொழி</u>

**மேலே குறிப்பிட்டுள்ள விவரங்கள் யாவும் உண்மையானது எனவும், முழுமையானது எனவும், சரியானது எனவும். நான் சான்றளிக்கிறேன். மேலே குறிப்பிட்டுள்ள விவரங்கள் பொய்யானவை என்றோ, தவறானவை என்றோ, எத்தத் தருணத்தில் தெரியவந்தாலும், நான் தகுதியற்றவன் / தகுதியற்றவள் எனத் தெரியவந்தாலும், என் மீது நடவடிக்கை எடுப்பதோடு மட்டுமல்லாமல் எனது தேர்வினை ரத்து செய்யலாம் என்று இதன் மூலம் நான் ஒப்புதல் அளிக்கிறேன், பணி நியமனத் தேர்வு குறித்த நடைமுறைகளுக்கும் தேர்வுகளின் சட்ட திட்டங்களுக்கும் நான் உட்படுகிறேன் என உறுதியளிக்கிறேன். மேலும், நான் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமத்தின் இணையத் தளத்தில் வெளியிடப்பட்டுள்ள தகவல் கையேட்டினை முழுவதும் படித்து அறிந்து அதன் விவரங்களை தெரிந்துக் கொண்டு இவ்விண்ணப்பத்தை பூர்த்தி செய்துள்ளேன் எனவும் உறுதியளிக்கிறேன்.**

**இடம் :**
**நாள் :** **விண்ணப்பதாரரின் கையொப்பம்**

**<u>விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ள சான்று நகல்களின் விவரம்:</u>**

1. 2. 3.

**VII) <u>விண்ணப்பிக்கும் முறை:</u>**

1) மாதிரி விண்ணப்பப் படிவத்தினை 21 செ.மீ, x 30 செ.மீ, (foolscap) அளவில் வெள்ளைத் தாளில் தெளிவாக தட்டச்சு செய்து ஆங்கிலத்தில் பூர்த்தி செய்து நேரிலோ அல்லது தபாலிலோ 08-01-2009 அன்று மாலை 5.45 மணிக்குள் சென்னை-2, எண், 807, அண்ணா சாலையில் அமைந்துள்ள **தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமத்தில்** கிடைக்கும்படி அனுப்பி வைக்க வேண்டும்.
2) இக் குறிப்பிட்ட தேதிக்கு பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் முழுமையாக நிராகரிக்கப்படும்.
3) நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் ரூ, 250/-க்கான வரைவோலை ஒன்றினை பாரத ஸ்டேட் வங்கியிலிருந்து வாங்கப்பட்ட வரைவோலை **(Demand Draft)** ஒன்றினைச் சென்னையில் காசாக்க ஏதுவாக Branch Code No.8443 என்ற பெயருக்கு எடுத்து விண்ணப்பத்துடன் அனுப்பவும் <u>"The Chairman, Tamilnadu Uniformed Services Recruitment Board, Chennai-600 002"</u> (A Demand Draft drawn on State Bank of India (8443) in favour of the Chairman, Tamilnadu Uniformed Services Recruitment Board, Chennai-600 002 should be enclosed with the application)
4) வரைவோலை இல்லாமல் ரொக்கப் பணமோ, வரைவோலை எடுத்ததற்கான வங்கி இரசீதையோ அனுப்பக்கூடாது.
5) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு விண்ணப்பக் கட்டணத்தை பொறுத்தவரை எந்த சலுகையும் கிடையாது.
6) தன் முகவரியிட்ட ரூ, 6/-க்கான தபால் வில்லை ஒட்டிய 25 செ.மீ. X 12 செ.மீ. அளவிற்குக் குறையாத உறை ஒன்றினை இணைத்து அனுப்பவும்.
7) உறையின் மேற்பகுதியில் "**தமிழ்நாடு காவல் துறை உதவி ஆய்வாளர்கள் (தொழில்நுட்பம்) தேர்வு 2006**" என்று குறிப்பிடவும்.
8) விண்ணப்பப் படிவத்துடன் கீழ்க்கண்ட சான்றிதழ்களின் <u>**நகல்களை**</u> மட்டுமே இணைத்து அனுப்பவும்.
   i) வயதை நிரூபிக்கக் கல்விச் சான்று.
   ii) கல்விச் சான்று.
   iii) சாதிச் சான்று (அரசாணை நிலை எண் 2137 ஆதி திராவிடர் / பழங்குடி நலத்துறை, நாள் 11-11-1989 ன்படி பழங்குடி வகுப்பை சார்ந்தவர்கள், வருவாய் கோட்டாட்சி அலுவலரால் வழங்கப்பட்ட சாதிச் சான்றிதழின் நகலை மட்டுமே சமர்பிக்க வேண்டும்.
   11-11-1989 க்கு முன்னர் தாசில்தார்களால் வழங்கப்பட்ட பழங்குடி வகுப்பைச் சார்ந்தவருக்கான சாதிச் சான்றிதழின் நகலை சமர்ப்பித்தாலும் செல்லுபடியாகும்.
   iv) இராணுவத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றிருப்பின் அதற்கான சான்று. (Discharge Certificate).
   v) ஆதரவற்ற விதவைக்கான சான்று (சம்பந்தப்பட்ட கோட்டாட்சியரிடமிருந்து **[RDO / Sub-Collector / Dy. Collector]** பெறப்பட்டது.
   vi) ஏற்கெனவே மத்திய அல்லது மாநில அரசுப் பணியில் இருப்பவர்கள் தங்கள் விண்ணப்பங்களை அவரவர்கள் பணிபுரியும் துறை மூலம் தடையில்லாச் சான்று <u>(No Objection Certificate)</u> பெற்று விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.
9) நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பத்தினை "**தலைவர், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம், P.T. Lee. செங்கல்வராய நாயக்கர் டிரஸ்ட், 2-வது தளம், எண். 807, அண்ணா சாலை, சென்னை-600 002**" என முகவரியிட்டு அனுப்பவும்.
10) ஒருவர் ஒரு விண்ணப்பத்தினை மட்டுமே அனுப்ப வேண்டும். ஒன்றிற்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
11) அண்மையில் எடுக்கப்பட்ட புகைப்படம் ஒன்றை விண்ணப்பத்தில் ஒட்டவும்,
12) விண்ணப்பக் கட்டணம் எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பியளிக்கப்படமாட்டாது.
13) சரியாகப் பூர்த்தி செய்யப்படாத / கையொப்பமிடாத / புகைப்படம் ஒட்டப்படாத / தகுதியற்ற / தகுதி குறித்த சான்றிதழ் இணைக்கப்படாத / சரியான முகவரியிடப்படாத வங்கிவரைவோலையற்ற/வங்கி வரவோலையில் வங்கி அதிகாரியின் கையொப்பம் இல்லாத அல்லது குறைந்த மதிப்புடைய வங்கி வரைவோலையுடன் கூடிய விண்ணப்பங்கள். முதல்கட்ட பரிசீலனையிலேயே முன்னறிவிப்பு இன்றி நிராகரிக்கப்படும்.
14) பல்வேறு தேர்வுகளின் போது போட்டியாளர்களுக்கு ஏற்படும் விபத்து, உயிரிழப்பு, உடல்நல பாதிப்பு மற்றும் காயங்களுக்கு இத்துறையோ, தேர்வுக் குழுமமோ, அரசோ பொறுப்பேற்காது.

**VIII) <u>அழைப்புக் கடிதம் :</u>**
**எழுத்துத் தேர்வு** <u>22-02-2009</u> **ஞாயிறு காலை** 10.00 **மணிக்கு** நடைபெறும். இத்தேர்வுக்கான அழைப்புக் கடிதங்கள் தேர்வு மைய விவரங்களுடன் தகுதியுடைய விண்ணப்பதாரர்களுக்கு அவர்களது விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு அனுப்பப்படும்.

**IX) <u>தேர்வு முறைகள்:-</u>**

**i) <u>எழுத்துத் தேர்வு:</u>** எழுத்துத் தேர்வு கீழ்கண்டவாறு இருக்கும்:-

| | | |
|---|---|---|
| 1. பொது அறிவுத் தேர்வு [குறியிலக்கு முறையில் (தமிழ் / ஆங்கிலத்தில்)] | : | 35 மதிப்பெண்கள் |
| 2. தொழில்நுட்பம் குறித்த எழுத்துத் தேர்வு [குறியிலக்கு முறையில் (தமிழ் / ஆங்கிலத்தில்)] | : | <u>50 மதிப்பெண்கள்</u> |
| மொத்தம் | : | <u>85 மதிப்பெண்கள்</u> |

(1) பொது அறிவுத்தேர்வு பட்டப்படிப்பு தரத்திற்கு இருக்கும், (2) ஒரே கேள்வித்தாளில் பகுதி "அ" பொது அறிவு வினாக்களையும், பகுதி "ஆ" தொழில் நுட்பம் குறித்த வினாக்களையும் கொண்டதாக எழுத்துத் தேர்வு இருக்கும் (3) எழுத்துத் தேர்வில் குறைந்தபட்சம் 30 மதிப்பெண்கள் பெறவேண்டும். (4) இத் தேர்வு தொடர்பான பாடதிட்டங்கள் இந்த தேர்வுக் குழுமத்தின் www.tn.gov.in/tnusrb என்ற இணையதளத்தில் தனியாக வெளியிடப்பட்டுள்ள தகவல் சிற்றேட்டில் (Prospectus) தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ii) <u>அசல் சான்றிதழ்களைச் சரிபார்த்தல்:-</u>** எழுத்துத் தேர்வில் தேர்வு பெற்றவர்களுக்கு மட்டுமே அசல் சான்றிதழ்கள் சரிபார்க்கப்படும். விண்ணப்பத்துடன் அனுப்பிய சான்றிதழ்களின் <u>**அசல்கள்**</u> அனைத்தையும் பின்னர் தெரிவிக்கப்படும் தேர்வு மையம் மற்றும் தேதியில் சரிபார்ப்பதற்காகக் அவசியம் கொண்டுவர வேண்டும்.

**iii) <u>உடல் கூறு அளத்தல் (Physical Measurement Test):</u>** எழுத்துத் தேர்வில் தேர்ச்சி பெற்று, கல்வி, வயது ஆகியவற்றில் தகுதியுடையவர்கள் மட்டும் இத்தேர்வுக்கு அனுமதிக்கப்படுவர்.

**X) <u>நேர்முகத் தேர்வு:</u>** உடல் கூறு அளத்தலில் தேர்ச்சி மற்றும் எழுத்துத் தேர்வில் பெறும் மதிப்பெண்களின் அடிப்படையில் வகுப்புவாரி விகிதாச்சாரப்படி அறிவிக்கையில் குறிப்பிட்ட காலியிடங்களில் மூன்று மடங்கு எண்ணிக்கை உடையோர் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவார்கள்.

**XI) <u>மருத்துவத் தேர்வு:</u>** (i) எழுத்துத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வில் பெறும் மொத்த மதிப்பெண்களை வைத்து தகுதியின் அடிப்படையில் இந்த விளம்பரத்தில் குறிப்பிட்டுள்ள காலியிடங்களுக்கு இட ஒதுக்கீடு மற்றும் வகுப்புவாரி விகிதாச்சாரத்தின்படி தகுதியானவர்கள் மட்டுமே மருத்துவத் தேர்வுக்கு அழைக்கப்படுவர்.

**(ii) லேசர் சிகிச்சை மூலம் கண் பார்வை தகுதி பெற்றிருந்தால் அது செல்லத்தக்கதல்ல. முதல் மருத்துவக் குழுமத்தின் அறிக்கையை எதிர்த்து மேல் முறையீடு செய்ய மூன்று மாத கால அவகாசம் வழங்கப்படும். இரண்டாவது மருத்துவக் குழுமத்தால் அளிக்கப்படும் அறிக்கையே முடிவானதாகக் கருதப்படும்.**

**XII) <u>மதிப்பெண்களின் ஒதுக்கீடு:</u>**

| | | |
|---|---|---|
| 1. எழுத்துத் தேர்வு [தொழில்நுட்பம் மற்றும் பொது அறிவு [50 + 35] குறியிலக்கு முறையில் (தமிழ் / ஆங்கிலத்தில்) ] | : | **85 மதிப்பெண்கள்** |
| 2. நேர்முகத் தேர்வு (Viva-voce) | : | **15 மதிப்பெண்கள்** |

**XIII)** தேர்வு முடிவுகள் www.tn.gov.in/tnusrb என்ற இணையதளத்தில் வெளியிடப்படும். இணையதளத்தில் முடிவுகள் வெளியிடப்படும் செய்தி நாளிதழ்களில் வெளியிடப்படும். தேர்ச்சி பெறாதவர்களுக்கு தனித்தனியாக முடிவுகள் அனுப்பப்படமாட்டாது. இத்தேர்வு குறித்து பரிந்துரை செய்தாலோ அல்லது தகாத செயல்களில் ஈடுபட்டாலோ அவரின் விண்ணப்பம் எவ்வித முன்னறிவிப்பின்றி நிராகரிக்கப்படும். **இத்தேர்வு தொடர்பான அனைத்து விதிமுறைகளும், தகவல்களும் www.tn.gov.in/tnusrb என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ள தகவல் சிற்றேட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.** அவற்றை படித்து தெரிந்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

**தலைவர்**
**தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம், சென்னை-600 002**